BRARY
2 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

நான்காம் வருட /இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013 /2014
(மார்ச் 2016)

## TLS 4203 மொழியும் ஒலிபரப்புக் கலையும்

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. அ) வானொலி உரை அல்லது பேச்சுக்கு எழுத்துப் பிரதி அவசியம் என்று நீர் கருதுகின்றீரா? அதற்கான நியாயங்களை எடுத்துக் கூறுக.
(10 புள்ளிகள்)

ஆ) "ஒரு வானொலிப் பேச்சுப் பிரதியானது நேயர்களுக்கு நல்ல பயன் மிக்கதாக அமைய வேண்டுமெனின் அது நேர்த்தியான முறையில் எழுதப்பட வேண்டும்" விளக்குக. (15 புள்ளிகள்)

02. அ) "வானொலிக்கான செய்தி அறிக்கையினைத் தயாரிக்கும்போது தயாரிப்பாளர் பல்வேறுபட்ட ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது" அத்தகைய ஒழுங்குமுறைகள் யாவை?
(13 புள்ளிகள்)

ஆ) வானொலிச் செய்தி அறிவிப்பாளர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளிலே தெளிவுடைமை, ஏற்புடைமை, கருத்துடைமை ஆகிய மூன்றும் அடிப்படையானவையாக அமையுமாற்றை எடுத்துக் காட்டுக. (12 புள்ளிகள்)

03. "யதார்த்தபூர்வமானதொரு வானொலி நாடக உருவாக்கத்தில் நாடகாசிரியர் (நாடக எழுத்தாளர்) மட்டுமன்றி தயாரிப்பாளரும் முக்கிய பொறுப்புடையவர் ஆவார்" மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

04. அ) வானொலி நேர்காணலொன்றை மேற்கொள்வதற்கு முன்னர் செய்தியாளர் முன்கூட்டியே திட்டமிட வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.
(10 புள்ளிகள்)

ஆ) ஆளுமை மிக்க செய்தியாளரொருவர் நேர்காணலொன்றைத் திறம்பட நடத்திச் செல்லும் விதம் குறித்துக் கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

05. அ) வானொலி 'விவரணச் சித்திரத்தில்' உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களாக நீர் எவற்றைக் கருதுவீர்? (05 புள்ளிகள்)

ஆ) அவற்றைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்டதொரு இடம் அல்லது விடயம் பற்றி வானொலிக்கு விவரணச் சித்திரப் பிரதி ஒன்றைத் தயாரிக்குக. (20 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

அ) நீர் கேட்டு ரசித்த வானொலி நாடகம் பற்றிய விமர்சனம்
ஆ) உலக வானொலிச் சேவையின் வளர்ச்சி
இ) தற்கால இலங்கைத் தமிழ் வானொலிச் சேவை நிகழ்ச்சிகளின் தரம்
ஈ) வானொலி நேர்முக வர்ணனை – தயாரிப்பும் அதன் முக்கியத்துவமும்

(12 ½ x2=25 புள்ளிகள்)

*********************************************************************************